ॐ

தணிகை பஞ்சாங்கம்

Balu Saravana Sarma *Prohithar — Astrologer*

No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA. Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677

Email: prohithar@gmail.com Web: www.prohithar.com

# மஹாளய பட்சம் (மாளய பட்சம்) Malaya Patcham 2013

(20.9.2013 வெள்ளி முதல் 04.10.2013 வெள்ளி வரை) Very Auspicious days for Deceased Ancestors

## மாளய அமாவாசையில் தான - தர்மம்



*குட்லைப் சென்டர், ஆதீஸ்வரர் இல்லம், உதவும் உள்ளம் இல்லம் பொறுப்பாளர்கள் தான பொருட்களை திரு.எஸ்.ஆர்.ராஜா (தாம்பரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தலைவர்-பழைய தாம்பரம் கிராம நலசங்கம்) அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்கிறார்கள்*

- மாளய அமாவாசை (4.10.2013) அன்று ஏழைகளுக்கு ஒரு ரூபாய் கட்டணத்தில் தர்பணம் செய்து வைக்கப்படும்
- அன்று வரும் அனைத்து பொருள்களும் ஆதரவற்றோர் இல்லத்திற்கு உடனடியாக தானம் செய்யப்படும்
- தர்மசிந்தனை உடையவர்கள் உதவியுடன் ஏழை மானவர்களுக்கு காலனி வழங்குதல், போர்வை வழங்குதல் நடைபெறும்.

கடந்த ஆண்டு 2012ல் மாளய அமாவாசை அன்று பழைய தாம்பரம் குளக்கரையில் நடந்த தர்பண நிகழ்ச்சியில் பெயர் வெளியிட விரும்பாத சில தர்மவான்கள் உதவியுடன் ரூ 20,000 செலவில் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு துணிகள், மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.

**இந்த ஆண்டு ஆதரவற்றோர் இல்ல ஏழை மாணவர்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள், பற்பசை, சோப், போர்வை, காலனி மற்றும் தரமான மழைதடுப்பு உடை (Raincoat ) தர உத்தேசித்துள்ளோம். இந்த புண்ணிய காரியத்திற்கு தான - தருமம் செய்ய விருப்பமுள்ளவர்கள் முன்னதாக தொடர்பு கொள்ளவும்.**

**எக்காரணம் கொண்டும் தானம் தருபவர்களின் பெயர்கள் அவர்களின் அனுமதி இன்றி வெளியிடப்படமாட்டது**



கடந்த ஆண்டு மஹாளய அமாவாசை புகைப்படங்கள் :
https://plus.google.com/photos/112292199305867435143/albums/5802136817079779249

## மாளய பட்சம் முன்னோர் வழிபாடு

(20.9.2013 வெள்ளி முதல் 04.10.2013 வெள்ளி வரை)

**ஆதரவற்றோர் இல்லங்களுக்கு உதவிடும் வகையில் தர்ம சிந்தனையுடன்**
**மஹாளய அமாவாசை தர்பணம்**
**04.10.2013 வெள்ளி**
**இடம்: நீத்தார் மண்டபம் உட்புறம்**
**பழைய தாம்பரம் குளம்**

மாளய அமாவாசைக்கு முன்னர் வரும் 15 நாட்கள் மாளயபட்சம் என்று அழைக்கப்படுகிறது இந்த நாட்களில் முன்னோர் நினைவாக வழிபாடு செய்வது மிகவும் நன்மையை தரும்.

இந்த நாட்களில் தர்ப்பணம், திதி செய்வதும், தான தர்மங்களை செய்வதும் மிகவும் அவசியமான ஒன்று. தங்களின் வசதிக்கு ஏற்ப ஏதேனும் ஒருநாளில் கூட செய்யலாம். மாளய அமாவாசை அன்று தர்ப்பணம் செய்வது மிகவும் புண்ணியமாகும்.

**தர்பணத்திற்கு செல்லும் பொழுது காலம் சென்ற மூதாதையர், ஆசிரியர்கள், அன்பானவர்கள், உறவினர்கள் பெயர்களை முன் கூட்டி ஒரு தாளில் வரிசையாக எழுதிக்கொண்டு செல்வதால் காலதாமதம், மறந்து விடுதல் ஆகியவற்றை தவிர்க்கலாம்!**

## வெளிநாடுகளில் உள்ளவர்கள்:

வெளிநாடுகளில் வசிப்பவர்கள் அருகில் உள்ள கோவிலுக்கு சென்று தர்பணம் செய்யலாம்

தர்பணம் செய்ய இயலாதவர்கள் ஆத்ம சாந்தி வழிபாடு செய்யலாம்

பாரதத்தில் உள்ள ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அல்லது பூர்வீக கிராமத்து பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி செய்யலாம்

## ஸ்ரீ விஜய (2013) வருட மாளய பட்சத்தில் குறிப்பிட்ட நாட்களும் அதன் முக்கியத்துவமும்

| திதி | உகந்தவர்கள் | தேதி - கிழமை |
|---|---|---|
| மஹாபரணி | அனைவருக்கும் | 23.9.2013 திங்கள் |
| வியதிபாதம் | அனைவருக்கும் | 26.9.2013 வியாழன் |
| மத்யாஷ்டமி | குறிப்பாக காணாமல் போனவர்களுக்கு | 27.9.2013 வெள்ளி |
| நவமி (அவிதவா நவமி) | அனைவருக்கும் | 28.9.2013 சனி |
| ஏகாதசி | அனைவருக்கும் | 30.9.2013 திங்கள் |
| துவாதசி(ஸன் யஸ்த மாளயம் | துறவு பூண்டவர்களுக்கு | 1.10.2013 செவ்வாய் |
| திரியோதசி(கஜச்சாயா) | விதவைகளுக்கு | 2.10.2013 புதன் |
| சதுர்தசி(சஸ்தரஹத மாளயம்) | விபத்து, தீ விபத்து, திடீர் மரணம் | 3.10.2013 வியாழன் |
| மஹாளய அமாவாசை | அனைவருக்கும் | 4.10.2013 வெள்ளி |


கவுண்டர் இறந்தார்.
இது குறித்து சேலையூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கிறார்கள்.

**ஆதரவற்றோர் இல்லங்களுக்கு மழை கோட்டு**

தாம்பரம், அக். 17: மகாளய அமாவாசை முன்னிட்டு தாம்பரம் புரோகிதர்கள் சங்கம் சார்பில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் நடந்தது. இதையொட்டி, தாம்பரத்தில் உள்ள உதவும் உள்ளங்கள், குட்லைப் சென்டர் போன்ற ஆதரவற்றோர் இல்லங்களுக்கு மழை கோட்டு, போர்வைகள், அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகள் ஆகியவற்றை தாம்பரம் முன்னாள் எம்எல்ஏ எஸ்.ஆர்.ராஜா வழங்கினார்.

கலவை குமார், பாலு. சரவண சர்மா, கணேஷ் அய்யர், சிவகணேஷ் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**வழிபாடு:** மேற்படி தினங்களில் தர்பணம், அன்னதானம், ஆத்மாசாந்தி, படையல் வழிபாடு நன்று.

**Mode of Prayer:** perform Tharpanam, Food Donation, Atma Shanthi Prayer

**ராகு காலம் - எமகண்டம், அபராண காலங்களில் தர்பணம் செய்வது மிகவும் நன்று**

www.prohithar.com

**பசு- கோமாதா**

மாளயபட்சத்தில் மேல் குறிப்பிட்ட நாட்களில் காலை 2 கிலோ கோதுமை தவிடு, 100 கிராம் வெல்லம், உறுவிய அகத்திகீரை 50 கிராம் எள்ளு ஆகியவற்றை கலந்து ஊரவைத்து பசுவிற்கு தானமாக தரவும்.

## மாளய பட்ச திதிகளில் தர்பணம் செய்யும் பலன் கள்



| | |
|---|---|
| பிரதமை: | செல்வம் பெருகும் (தனலாபம்) |
| துவிதியை: | வாரிசு பெருகும்(வம்ச விருத்தி) |
| திருதியை: | நல்ல விவாஹ சம்பந்தம்(வரன் ) கிட்டும் |
| சதுர்த்தி: | பகைமை விலகி, எதிரிகள் தொல்லை |
| பஞ்சமி: | விரும்பிய பொருள் கிடைக்கும்(ஸம்பத்து விருத்தி) |
| சஷ்டி: | மனதில் தெய்வீக தன் மை மேலோங்கும் (மற்றவர்கள் நம்மை போற்றுவார்கள்) |
| சப்தமி: | மேலுலகம் (பரலோக) ஆசிர்வதிக்கும் |
| அஷ்டமி: | உயரிய அறிவை தரும்(புத்தி) |
| நவமி: | ஏழுப்பிறவிக்கும் நல்ல மனைவியை(கணவனை) தரும் |
| தசமி: | விருப்பங்கள் தடைநீங்கி விரைவில் கிட்டும் |
| ஏகாதசி: | வேத வித்தைகள், கல்வி, கலைகள் கிடைக்கும் |
| துவாதசி: | தங்கம், வைர ஆபரங்கள் சேரும் |
| திரியோதசி: | நல்ல குழந்தைகள், மேதை, கால்நடைச்செல்வம்,நீண்ட ஆயுள் |
| சதுர்தசி: | முழுமையான இல்லறம் (கணவன் - மணைவியுடன் நல்ல வாழ்க்கை) |
| அமாவாசை: | மூதாதையர், ரிஷிகள், தேவர்கள் ஆசிர்வாதம் |

- மேற்படி தகவல் மூலஆதார நூல்: யஜுர் வேத ஆபஸ்தம்ப தர்பணம்

---

**மாளயத்தில் தர்பணம் செய்துவைக்கும் பிராமணருக்கு தரும் பணம் சம்பளம் (சம்பாவனை) ஆகும். அது தானம் அல்ல!**

**தாய் - தகப்பனார் உள்ளவர்கள் இதைசெய்யலாமா?**



தகப்பனார் இருந்தும் அவர் மாளயபட்ச வழிபாட்டை செய்யாத நிலையில் மகன் , மகள் யார் வேண்டுமானாலும் மாளயபட்ச வழிபாட்டை செய்யலாம். “தர்பணம்” தவிர்த்து பசுவிற்கு தானம், ஆதரவற்றோர் இல்லங்களில் தானம், ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி, ஆத்ம சாந்தி வழிபாடு, வேதபாடசாலைக்கு உதவி போன் ற வழிகள் மூலமாகவும் வழிபாடு செய்யலாம்.

அமாவாசை தினம் என் பது இறைவனடி சேர்ந்த மூதாதையர்களை (பித்துர்களை) நினைத்து அவர்களுக்கு வழிபாடு செய்யும் நாளாகும். நமது முற்பிறவியில் நாம் அனுபவித்த துன் பங்களுக்கும், இனி வரும் பிறவிகளில் நற்பிறவி எடுக்கவும், நம் சந்ததியினிர் நலமுடன் வாழவும் வழிபட மிகவும் புனிதமான நாளே அமாவாசை ஆகும். ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தன் று நீராடி மூதாதையர்களுக்கு படையல், தர்ப்பணம், ஆத்ம சாந்தி பூஜை, பசுவிற்கு அகத்திகீரை தானம் போன் ற வழிபாடுகளை செய்வது வழக்கம். அமாவாசையில் மஹாளய அமாவாசை மிகவும் குறிப்பிடத்தக்கது.

மஹாளய பட்சம் என் பது ஒவ்வொரு ஆண்டும் சந்திர மாதப்படி பாத்ரபதம் (தமிழ்படி ஆவணி, புரட்டாசி மாதங்களில் வரும்) பவுர்ணமிக்கு அடுத்த நாளான பிரதமை முதல் அமாவாசை வரை 15 தினங்களுக்கு தேய்பிறையில் இறந்த பித்ருக்கள் பூமிக்கு வருகிறார்கள் என் று நம்பப்படுகிறது. இறந்து போனவரின் திதி தெரிந்தால் மாளயபட்சத்தில் வரும் அந்த திதி தினத்தன் றும், தெரியாவிட்டால் மஹாளய அமாவாசை தினத்தன் றும் பித்ருக்கள் நற்கதி அடைய பூஜை செய்யவேண்டும் என் று சுறப்பட்டுள்ளது.

மஹாளய அமாவாசை தினத்தன் று பித்ருக்கள், குறிப்பாக ஆயுதம் மூலமாககொல்லப்பட்டோ, தற்கொலை செய்து கொண்டோ, அல்லது விபத்து மூலமாக அகாலமரணடைந்து போன பித்ருக்களுக்கு முக்தி கிடைக்க வேண்டும் என் பதற்காக பூஜைசெய்யும் நாளாகும்.

*மஹாளய அமாவாசை தினத்தன் று உணவிற்காக ஏங்கும் மனிதனுக்கும், ஆதரவற்றோர் இல்லங்களுக்கு, வேதபாடசலையில் பயிலும் மாணவர்களுக்கு அன் னதானம் செய்வதுதான் மிக சிறந்தது என் று உபநிடதங்களும், வேதங்களும், சாஸ்திரங்களும் வலியுறுத்துகிறது.*

**“தர்பணம் செய்து வைக்கும் பிராமணர்களுக்கு தருவது சம்பளம் (சம்பாவனை) அது தானம், தர்மம் அல்ல”**

---

**வானவியல் கணிதம்: மாளய அமாவாசை ஓர் விளக்கம்**




சந்திரனின் மீது விழும் சூரிய ஒளியை பூமியில் இருந்து பார்க்கும் பொழுது தோன் றும் பிறையின் கோண அளவே திதி ஆகும். சூரியனை நோக்கி செல்லும் பொழுது தேய்பிறை என் றும், சூரியனை எதிர்த்து செல்வது வளர்பிறை என் றும் அழைக்கப்படுகிறது. **சூரியனும் சந்திரனும் தீர்காம்ஸ அடிப்படையில் இணைவது அமாவாசையாகும்**. சந்திரன் பூமிக்கு பின் புறமும் அதே நேரத்தில் சூரியனுக்கு எதிராக வரும் பொழுது பௌர்னமியாக தோன் றும். பௌர்னமியை கண்களால் காணலாம் ஆனால் அமாவாசையை கணித வழியில் மட்டுமே அறிய முடியும் !! ( சூரிய கிரகணத்தில் சந்திரன் கருப்பு வட்டமாக தோன் றும்)

சூரியன் , சந்திரன் , பூமி நேர்கோட்டில் வருவதே அமாவாசையாகும்

www.prohithar.co

ஆயினும் சந்திரனின் புவி வட்ட கோணம் 5 பாகை சாய்வு நிலையில் இருப்பதால் சூரியனை சந்திரன் அனைத்து அமாவாசை தினங்களிலும் மறைப்பதில்லை. சூரியன் , சந்திரனின் சாய்வு கோணம், புவி வெட்டுப்புள்ளியும்(Draconic Node) சந்திக்கும் பொழுது மட்டுமே சூரிய கிரகணம் நிகழும் .

சூரியனை தொட்ட சந்திரன் வளர்பிறையாக பின்னர் தேய்பிறையாக தோன்றி மீண்டும் சூரியனை(360 பாகை சுழற்ச்சி) தொட ஆகும் காலம் *(synodic period)* சுமார் 29 நாள் 12 மணி 44 நிமிடம். இந்த கால இடைவெளியை இந்து முறைப்படி 30 பகுதிகளாக முறையே வளர்பிறை 14திதிகள், பௌர்னமி, தேய்பிறை 14திதிகள், அமாவாசை என மொத்தம் 30 திதிகளாக(பாகங்களாக) பிரிக்கப்படுகிறது. சந்திரன் , பூமியின் (சூரிய) நீள்வட்ட பாதை காரணமாக சுழற்ச்சி வேகம் தொடர்ந்து மாறுதலடைவதால் திதியின் கால அளவும் வேறுபடுகிறது. ஒரு திதி என்பது சந்திரனின் ஒரு சுழற்ச்சியான*(synodic period)* 360 பாகையை 30ஆல் வகுக்க வரும் 12 பாகை கோண அளவாகும்.




ஒரு சூரிய(தமிழ்) மாதத்தில் இரண்டு அமாவாசைகள் வந்தால், முதல் அமாவாசை துவங்கி இரண்டாம் அமாவாசை வரை உள்ள ***சந்திர மாதம்*** <u>மல மாதம்</u> என்றும் <u>அதிக மாதம்</u> என்றும் அழைக்கப்படுகிறது. இந்த சந்திர மாதத்தை கணக்கில் கொள்ளாமல் அடுத்து வரும் சந்திர மாதம் நிஜமாதம் என அழைக்கப்படும்.

தமிழர்களின் மாதம் சூரிய அடிப்படையிலானது இதில் அதிக மாதம், மலமாதம் ஏற்படாது. இந்த தோஷங்கள் வருடத்திற்கு சரியாக 12 மாதங்கள் கொண்ட தமிழ் மாதங்களுக்கு பொருந்தாது.

சந்திரமாதத்தினை சூரியமாதத்துடன் 2.7 வருட இடைவெளியில் ஒருமுறை சமன் படுத்தப்படுகிறது. இதற்கு அமாவாசை மிக முக்கிய காரணியாக உள்ளது.

◆ மாளைய அமாவாசை என்பது சந்திர மாத அடிப்படையிலான பாத்திரபத மாதத்தில் வரும் அமாவாசையாகும் ◆




<u>அமாவாசையின் குறைந்த பட்ச அதிக பட்ச கால அளவு:</u> 19 மணி 59 நிமிடம் முதல் 26 மணி 47 நிமிடம் வரை இருக்கும்

நீள்வட்ட பாதையில் பூமிக்கு அருகில் சந்திரன் இருக்க அமாவாசை நிகழுமாயின் சந்திரனின் அதிகமான சுழற்ச்சி வேகம் காரணமாக அமாவாசையின் கால அளவு குறைந்தும்.

நீள்வட்ட பாதையில் பூமிக்கு தொலைவில் சந்திரன் இருக்க அமாவாசை நிகழுமாயின் சந்திரனின் சுழற்ச்சி வேகம் குறைவதால் அமாவாசையின் கால அளவு அதிகரித்தும் இருக்கும்.

***குறிப்பு: சந்திரன் பூமியை நட்சத்திர பின்னனியில் சுற்றிவர (sidereal period) ஆகும் காலம் 27நாட்கள் 7மணி 43 நிமிடம்***

திதியின் பாதி அளவே ***கரணம்*** ஆகும்(6 பாகை அளவு), கரணம் மொத்தம் 11 ஆகும் அமாவாசை அடுத்த பிரதமை திதியின் பின் பாதியில் "பவ" கரணம் துவங்கும்.

Tithi: The moment of new Moon, or that point of time when the longitudes of Sun and Moon are equal is called 'amavasya'. The tithi is the time taken by the Moon in increasing its distance from the Sun by 12 degrees. The complete revolution of the Moon (29.5 days) occupies 30 tithis for 360 degrees. Since the motions of the Sun and Moon are always varying in speed the length of a tithi constantly alters.

---

## தர்பண சங்கல்பம்: Sankalpam- மாளயம் (4.9.2013)அன்று சங்கல்பம் - தமிழாக்கம்

*காலை 7 மணிக்கு மேல் இந்தியா முழுவதும் பயன் படுத்தலாம்,*
*காலை 9:30 மணிக்கு மேல் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியாவில் பயன் படுத்தலாம்*

கலியுகம்: 5115, ஸ்ரீவிஜய வருடம்( பிரபவ முதல் 27ஆம் ஆண்டு), தக்ஷிணாயனம் (சூரியன் தெற்கில் பயணம்), வருஷ ருது (மழைக்காலம்), கன்யா மாஸம் - புரட்டாசி மாதம் (சூரியன் கன்னி இராசியில் அதாவது 150 பாகை மேல் 180 பாகை இடையில் இருக்கும்), சாந்தரமான பாத்ரபத அமாவாஸை, பகுள, கிருஷ்ண பட்சம்(தேய்பிறை) அமாவாசை திதி (சூரியனுக்கு அருகில் இணைப்பு நிலையில் சந்திரன் உள்ள நாள்) உத்திரம் நட்சத்திரம் ($146^{\circ}$ 40' - $160^{\circ}$00' பாகை இடையில் பயணிக்கும் நாள்), வெள்ளிக்கிழமை - சுக்கிர வாரம் (சுக்கிர கிரகத்தை குறிக்கும் நாள்), பிராம்யம் யோகம் (சந்திர சூரிய பாகை கூட்டுத்தொகை ), சதுஷ்பாதம் கரணம்(திதியில் பாதி)

சங்கல்பம் என்பது வானவியல் நிலைகளை வடமொழியில் கூறுவதாகும்

**மாளயபட்ச தர்ப்பண மந்திரம்**
தமிழ் எழுத்து வடிவில், ஒலி வடிவில்-தமிழில்
எனது இணைய தளத்தில் தரப்பட்டுள்ளது(வடகலை, தென் கலை, ஸ்மார்தா)

**ஏகாதசி** 30.9.2013 திங்கள்

அஜா : புரட்டாசி(பாத்ரபத) க்ருஷ்ண ஏகாதசியை அஜா என்று சொல்வது. உலகத்தில் பிறப்புடையவன் துன்பமில்லாமல் இருப்பது அரிது. பிறந்ததுமே துன்பக்கடலில் மூழ்குவான் . இது இயற்கை. இந்த ஏகாதசியில் வ்ரதம் இருப்பவன் ஏற்பட்ட துன்பங்களிலிருந்து விடுபட்டு அஸத்ருசமான புதுப்பிறவையை அடைவான் . எனவே இதற்கு அஜை எனப்பெயர். அரிச்சந்திரன் வ்ருத்தாந்தம் நாம் அறிந்ததே. ராஜ்யத்தை இழந்தவன் மனைவி மக்களைத் துறந்தான் . தானும் ஒரு சண்டாளனிடம் அடிமையாய் இருந்தவன் . இப்படி பலஅல்லல்களுக்கு ஆளானவன் . இவனை கௌதம முனிவர்கண்டார். இரக்கம் கொண்டார். இந்த ஏகாதசியில் வ்ரதமிருந்தால் துன்பங்கள் அகலும் என்றார். இதன்படி இவன் நடந்தான் . மனைவியையும் மக்களையும் இராஜ்யத்தையும் பெற்றான் . எனவே இதில் உபவாஸம் இருப்பவன் இழந்தவைகளைப்பெற்று ஸுகமடைவான் .

## அடுத்த ஆண்டு மாளய அமாவாசை நாள் : 23.9.2014 Tuesday

**தர்மம் தலைமுறை காக்கும்: ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் வேதபாடசாலை**

| | |
|---|---|
| ஆதீஸ்ரர் இல்லம் ஆதரவற்றோர் இல்லம் | : 94444 85491 |
| குட்லைப்சென்டர் (மன வளர்ச்சி குன்றியோர்) | : 2226 4151, 2226 4152 |
| அக்ஷயா ஆதரவற்ற முதியோர் இல்லம் | : 2276 1658, 98410 08325 |
| சரணாலயம் ஆதரவற்ற முதியோர் இல்லம் | : 94444 94657, 94448 08915 |
| பவுஷ்ய தீபம் ஆதரவற்ற மனவளர்ச்சி குன்றியோர் இல்லம் | : 2276 1889, 94440 00889 |
| உதவும் உள்ளங்கள் (ஆதரவற்ற குழந்தைகள்) | : 2226 0612, 6544 6378 |
| ஸ்ரீ சாரதா சக்தி பீடம் ஆதரவற்ற சிறார் இல்லம், பள்ளி | : 2276 0612, 2233 3214 |
| சிவாகம வேதபாட சாலை | : 65129744, 94443 12367 |
| அஹோபில மடம் வைணவ வேத பாட சாலை | : 2239 7567, 94440 47567 |
| காயத்ரி ஞானவாபி (ஆதரவற்றோர் இறுதி சடங்கு) | : 22212984, 2238 3333 |

கடந்த ஆண்டு மஹாளய அமாவாசை புகைப்படங்கள் :
https://plus.google.com/photos/112292199305867435143/albums/5802136817079779249

## மழை தடுப்பு உடை (Raincoat) தானம்



ஆதரவற்ற மாணவர்கள் பள்ளிக்கு மழைக்காலங்களிலும் தினமும் பள்ளிக்கு செல்ல அவர்களுக்கு மழை தடுப்பு உடை (Raincoat) தந்து அவர்கள் தங்குதடையின்றி கல்வி பெற உதவி செய்வதும் தர்மம் தான்

மாளைய அமாவாசை அன்று ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள மாணவர்களுக்கு மழை தடுப்புஉடை (Raincoat) தானமாக தர திட்டமிட்டுள்ளோம். இந்த தர்ம காரியத்திற்கு தங்களின் மேலான ஆதரவு தேவை.

தானம் செய்பவர்கள் முன்னதாக தொடர்பு கொண்டால் அவர்களுக்கு ஆதரவற்றோர் இல்லத்திற்கு தேவையான பொருட்கள் குறித்த விபரங்கள் தெரிவிக்கப்படும்

**எக்காரணம் கொண்டும் தானம் தருபவர்களின் பெயர்கள் அவர்களின் அனுமதி இன்றி வெளியிடப்படமாட்டாது**



**தணிகை பஞ்சாங்கம்** பாலு சரவண சர்மா
*பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.

தணிகை திருக்கணித பஞ்சாங்கம்

காப்புரிமை © 13.9.2013

புரோகிதர் தொடர்பு நேரம் பகல் 1 மணிக்கு மேல். (முகூர்த்த நாட்களில் தொடர்பு நேரம் மாறுதலுக்குட்பட்டது)



www.prohithar.com